பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 12 வியாழக்கிழமை (28.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 303

# ஏ-9 பாதையைத் திறக்குமாறு புலிகள் மீண்டும் வற்புறுத்தல்

## யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நிலைநிறுத்துகின்ற மைய நல்லெண்ண நாண் அது என தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்ரெம்பர் 28

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் லார்ஸ் ஜோன் ஸோல்வ்பேர்க்கை கிளிநொச்சியில் நேற்று சந்தித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், ஏ-9 கண்டி வீதி ஊடான பாதையை மக்கள் போக்குவரத்துக்காக மீளவும் திறந்துவிட வேண்டியதன் அவசியத்தை அப்போது மீண்டும் வலியுறுத்தினார்.

இந்தப் பாதையைத் தடையின்றி, மக்களின் தாராளப் போக்குவரத்துக்குத் திறந்து விடுவதே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் மைய முதுகெலும்பாக - முள் நாணாக - இழையோடுகின்றது என்று இச்சந்திப்பின் போது சுட்டிக் காட்டிய தமிழ்ச்செல்வன், யுத்த நிறுத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தும் வகையில் தூக்கி நிறுத்துவதற்கு அந்த நல்லெண்ண நடவடிக்கை நிலைநிறுத்தப்படுவது அவசியம் என்றும் சுட்டிக்காட்டினார். (08 ஆம் பக்கம் பார்க்க)



தியாகி லெப்.கேணல் திலீபன், கேணல் சங்கர் ஆகியோரது நினைவு தினமான நேற்று முன்தினம் அவர்களது உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.

## நாடாளுமன்றின் மத்தியில் நேற்று தமிழ் எம்.பிக்கள் சத்தியாக்கிரகம்

### ஏ-9 வீதியைத் திறப்பது உட்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி

கொழும்பு,செப்.28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று நாடாளுமன்ற அமர்வின் முழு நேரமும் கறுப்புச் சால்வை அணிந்து சபையின் நடுவே அமைதியாகச் சத்தியாக்கிரகம் நடத்தினர்.

யாழ்.குடாநாட்டுக்கான ஏ-9 வீதியைத் திறக்க வேண்டும், கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கான வீதிகளைத் திறக்க வேண்டும். புலிகளின் பகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும் - என்ற மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்தே இந்த நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுத் திடீர் விஜயம்

### உணவு நிலை குறித்து மீளாய்வு

யாழ்ப்பாணம், செப்.28

குடாநாட்டின் அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்களின் நிலைமை குறித்துக் கண்டறிவதற்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரத்தின நேற்று யாழ்ப்பாணம் வந்தார். அவருடன் கல்வி அமைச்சு, மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

பலாலிக்கு நேற்று வருகைதந்த அவர்கள் பலாலி படைத்தளத்தில் விசே. மாநாடு ஒன்றை நடத்தினர்.

அந்த மாநாட்டில் யாழ்.அரச அதிபர் கே. கணேஸ் மற்றும் அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடைய திணைக்களங்களின்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் நேற்றுப் பகல் 2 தடவைகள் குண்டுவீச்சு!

கொழும்பு,செப்.28

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்றுமுற்பகல் இரண்டு தடவைகள் கிபிர் விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது அடுத்தடுத்து குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

வற்றாப்பளை, கேப்பாப்பிளவு ஆகிய பகுதிகளில் நேற்றுமுற்பகல் 10 மணிக்கும் 10.45 மணிக்கும் இரு தடவைகள் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

மக்கள் முற்கூட்டியே பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்ததனால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன; உடைமைகள் மட்டுமே சேதமடைந்தன.

புதுக்குடியிருப்பு, வல்லிபுனம் பகுதியில் கடந்த மாதம் செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த 65 மாணவர்களின் 45ஆவது நினைவுநாள் நேற்றையதினம் அங்கு அனுஷ்டிக்கப்பட்ட வேளையிலேயே இந்த விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியைத் திறப்பது சாத்தியமல்லவாம் மாற்றுப் பாதை குறித்து அரசு பரிசீலனை

### இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, செப்.28

"விடுதலைப் புலிகள் தமது வருமான நோக்கத்திற்காகவே ஏ-9 வீதியைத் திறக்க முற்படுகின்றனர். ஆனால், அதனை இப்போதைக்குத் திறக்கும் சாத்தியம் இல்லை."

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏ-9 வீதிப்பகுதியில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன.

நேற்றும்கூட (செவ்வாய்) விடுதலைப் புலிகளின் எறிகணைத்தாக்குதலில் இராணு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல், டீசலின் விலைகள் குறைப்பு

கொழும்பு, செப்.28

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று நள்ளிரவு முதல் பெற்றோல் மற்றும் டீசல் விலைகளைக் குறைத்துள்ளது என பெற்றோலிய, எரிபொருள் வள அமைச்சர் ஏ. எச். எம். பௌசி நேற்றுத் தெரிவித்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானப் பேச்சுத் தொடர்பாக புதிய நம்பிக்கை துளிர்ப்பு!



## தலைவர் பிரபாகரனிடமிருந்து சாதகமான சமிக்ஞை வந்திருப்பதாக அரசு அறிவிப்பு

கொழும்பு,செப்.28

சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடமிருந்து சாதகமான சமிக்ஞைகள் கிடைத்திருக்கின்றன என்று பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான பேச்சாளரும், அமைச்சருமாகிய ஹெகலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

எனினும், அந்தச் சமிக்ஞைகள் என்ன [illegible] மிருந்து கிடைத்திருக்கின்றன என்பன போன்ற விவரங்களை அவர் வெளியிடவில்லை.

நீண்டகாலமாகத் தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நோர்வே முயற்சி எடுத்து வருவது தெரிந்ததே.

இந்தப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதாயின் விடுதலைப் புலிகளின் [illegible] வே.பிரபாகரனிடமிருந்து உறுதிமொழி (08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



கிளிநொச்சிக்கு நேற்று வருகைதந்த கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் லார்ஸ் ஜோன் சோல்வ்பேர்க்கை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனும் கைகொடுத்து வரவேற்பதையும் இரு தரப்பினரும் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# பொத்துவில் கொலைக்கு சர்வதேச விசாரணை தேவை; நாடாளுமன்றத்திலும் ரவூப் ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு,செப்.28

பொத்துவில் - இரத்தல்குளம் பகுதியில் கடந்த 17ஆம் திகதி 11 அப்பாவி முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டது குறித்து விசாரணை செய்ய சர்வதேச ஆணைக் குழுவொன்றுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். ஜனாதிபதி வெளிநாட்டிலிருந்தபோது அவருக்கு இது தொடர்பாகக் கடிதமொன்றையும் அனுப்பி வைத்தேன் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. நேற்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்துப் பேசும்போது கூறினார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தொடர்ந்து அறிக்கை விடுத்துப் பேசும்போது கூறியதாவது:-

''இரத்தல்குளம் கொலைகள் தொடர்பாகப் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. சட்டத்தைப் பாதுகாக்கும் பிரிவினர் மீதும் இது தொடர்பாகக் கைகள் நீட்டப்படுகின்றன.

மூதூரிலும் இப்போது நிலைமை மீண்டும் சிக்கலாகியுள்ளது. புலிகளின் பெயரால் முஸ்லிம்களை வெளியேறும்படி கோரும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனால், முஸ்லிம் மக்கள் மீண்டும் இடம்பெயர்கின்றனர். கிண்ணியாவிலுள்ள இரண்டு பாடசாலைகளில் இவர்கள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மூதூரிலிலிருந்து முஸ்லிம்களை வெளியேறக் கோரும் துண்டுப் பிரசுரத்தை முஸ்லிம் காங்கிரஸ்தான் வெளியிட்டதென ஜே.வி.பியைச் சேர்ந்த எம்.பியொருவர் மூதூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும், சிலர் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் இத்துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

மூதூரிலிருந்து வெளியேறிய முஸ்லிம்களை மீண்டும் மூதூரில் மீளக் குடியேற்ற வேண்டும். அவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும் என்று ஹக்கீம் தெரிவித்தார். (க)

# பாணின் விலை மீண்டும் 28ரூபா

யாழ்ப்பாணம், செப்.28

குடாநாட்டில் பாணின் விலை இன்று முதல் 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அரச அதிபர் கே.கணேஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

திருகோணமலையிலிருந்து கப்பல் மூலம் பெறப்பட்ட பாண் தயாரிப்பதற்கான பிறிமாமாவின் விலை குறைக்கப்பட்டுள்ளது என்றும் -

இதன் காரணமாக 450 கிராம் பாணின் விலை இன்றுமுதல் இரண்டு ரூபாவால் குறைக்கப்பட்டு 28 ரூபாவாக விற்கப்படும்-என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

முன்னர் 28ரூபாவாக இருந்த பாணின் விலை இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. (1)

# திருட்டுப் பொருள்களுடன் கைதான எண்மர் பொலிஸாரிடம்!

## படையினர் கையளித்தனர்

யாழ்ப்பாணம்,செப்.28

சங்கக் கடையை உடைத்துத் திருடியதாகக் கூறப்படும் எட்டு நபர்கள் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கந்தரோடைக் கிளை உடைக்கப்பட்டு உணவுப் பொருள்கள் உட்படப் பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கூறப்படும் 8 பேரை மறுநாள் இராணுவத்தினர் கைதுசெய்தனர். கைதுசெய்தவர்களை திருடப்பட்ட பொருள்களுடன் உழவு இயந்திரத்தில் ஏற்றி ஊர்வலமாக சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு பிரதான வீதி வழியாக அழைத்துச் சென்று சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, திருடப்பட்ட பொருள்களில் ஒரு தொகுதி மட்டுமே மீட்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவை மீட்கப்படும் போது மேலும் சிலர் கைது செய்யப்படலாம் என்றும் கூறப்படுகின்றது. (1-202-68)

# 2800 தொன் உணவுப் பொருளுடன் மற்றொரு கப்பல் இன்று வருகிறது

யாழ்ப்பாணம், செப்.28

2ஆயிரத்து 800 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களுடன் 'இந்துருவலி' என்னும் கப்பல் இன்று காங்கேசன்துறை வருகின்றது.

அரிசி, மா, சீனி மற்றும் பால்மா வகைகளுடன் வரும் இக்கப்பலில் இருந்து பருத்தித்துறையில் வைத்து பொருள்களை இறக்கும் பணிகள் இன்று தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் இருந்து அத்தியாவசியப் பொருள்களுடன் வந்திருந்த 'லிபர்பூல்' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி நேற்று முடிவடைந்தது என்றும் -

இக்கப்பல் இன்று திருமலைக்குப் புறப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (1)

# தொலைக்காட்சி ஒளிபரப்புக்கான உரிமம் கோர்ர ஐ.தே.கட்சி முடிவு

கொழும்பு, செப்.28

தொலைக்காட்சி ஒளிபரப்புக்கான அனுமதிப்பத்திரம் ஒன்றை அரசிடம் கோருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தொலைக்காட்சி உரிமம் ஒன்றை அரசு ஜே.வி.பி. கட்சிக்கு வழங்கியிருப்பதையடுத்தே ஐ.தே.க. இந்தத் தீர்மானத்திற்கு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கையின் பழமைவாய்ந்த கட்சி என்ற அடிப்படையில் தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமம் ஒன்றைக் கோருவதற்கான உரிமை குறித்து அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் ஆலோசித்து வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

பதிவு செய்யப்பட்ட அரசியற் கட்சி ஒன்று தொலைக்காட்சி உரிமத்தைக் கோருவதற்கான ஏற்பாடுகள் இப்போது நடைபெற்று வருகின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் கூறின. (ஐ)

# புத்தளத்திலும் வெள்ளைவான் பீதி உடப்பில் இரு தமிழர்கள் கடத்தல்!

கொழும்பு,செப்.28

புத்தளம் மாவட்டம் உடப்புப் பகுதியில் வெள்ளைவானில் வந்த - சுமார் பத்து ஆயுததாரிகள் அடங்கிய - கும்பல் ஒன்றினால் இரு தமிழர்கள் கடத்தப்பட்டிருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11.10 மணியளவில் உடப்பு தமிழ் மகாவித்தியாலயத்துக்கு அருகில் - உடப்பு, ஆறாம் வட்டாரப் பகுதியில் - இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உடப்பு பார்த்தசாரதிப் பெருமாள் ஆலய அறங்காவல் சபை உறுப்பினரான தாமோதரன் மகேந்திரன் (வயது-43) அந்த ஆலய ஊழியரான சுப்பிரமணியம் பரமசிவம் (வயது-40) ஆகிய இருவருமே கடத்தப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கடத்தல் சம்பவம் குறித்து மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார். புலனாய்வுத்துறையினர் ஆறுமாதங்களுக்கு முன்னர் இந்த இருவரையும் கைதுசெய்து விசாரித்திருந்தனர் என்றும் -

அதன் தொடர்ச்சியே இக்கடத்தல் நடவடிக்கை எனத் தாம் கருதுகின்றார் என்றும் -

மனோ கணேசன் எம்.பி., பொலிஸ்மா அதிபரிடம் தெரிவித்திருக்கிறார்.

போருக்கு எதிரான முன்னணியினர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பில் சந்தித்துப் பேசியிருந்தனர்.

அப்போது-

ஆள் கடத்தல்கள் இடம்பெறாது என்றும், படையினர் அல்லது புலனாய்வுப் பிரிவினர் யாரையாவது கைதுசெய்ய விரும்பினால், அப்பிரதேச பொலிஸாருடன் சென்றே கைது செய்வர் என்றும்-

ஜனாதிபதி தங்களுக்கு உறுதி கூறியிருந்தார் என மனோ கணேசன் எம்.பி. குறிப்பிட்டார்.

ஆனால், அந்த உறுதிமொழி வழங்கப்பட்டு சிலமணி நேரத்திற்குள் உடப்பில் இரு தமிழர்கள் கடத்தப்பட்டிருக்கின்றனர் என விசனம் தெரிவித்தார் அவர்.

இந்தக் கடத்தல் குறித்து, கடத்தப்பட்டோரின் உறவினர்கள் முந்தல் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அரச புலனாய்வுத் துறையினரோ அல்லது படைத்தரப்பினரோ இந்த இருவரையும் கைது செய்தனர் என்பதற்கான தகவல் ஏதும் முந்தல் பொலிஸாருக்குக் கிடைத்திருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# தமிழ்க் கூட்டமைப்பு எம்.பியாக சந்திரகாந்தன் சத்தியப்பிரமாணம்!

கொழும்பு,செப்.28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினராக சந்திரநேரு சந்திரகாந்தன் நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் சபாநாயகர் டபிள்யூ.ஜே. எம். லொக்குபண்டார முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக்கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பியாகவிருந்த ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் அதிகாலை வேளை தேவாலயம் ஒன்றில் நத்தார் பூஜையில் ஈடுபட்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது வெற்றிடத்துக்கே சந்திரநேரு சந்திரகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். சந்திரகாந்தனின் தந்தை அரியநாயகம் சந்திரநேரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராவார்.

இவர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனுடன் வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்தபோது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் கௌசல்யனுடன் உயிரிழந்தார். அவரது தமிழ்த் தேசியப்பற்றுறுதியைக் கௌரவித்து தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவருக்கு மாமனிதர் கௌரவத்தை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க)

# ஜே.வி.பி. உறவைத் துண்டித்து விட்டுத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகிறார் ஜனாதிபதி ராஜபக்ஷ

கொழும்பு, செப். 28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை ஜே.வி.பி. கடுமையாக விமர்சித்து வரும் நிலையில், ஜே.வி.பியின் ஆதரவைப் பெறாமல் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலொன்றுக்குச் செல்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நேற்றுமுன்தினம் தாம் நடத்திய மந்திராலோசனை ஒன்றின்போதே தமது இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி மஹிந்த வெளியிட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, எஸ்.எம்.சந்திரசேன, மஹிந்த அமரவீர உட்பட்ட பிரமுகர்களை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் இரவு சந்தித்தார். அரசையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் ஜே.வி.பி. [illegible] விமர்சித்து வருவது பற்றி [illegible] திக்கப்பட்டது. ஆளுங்கட்சிக்குள் ஜே.வி.பி. பங்காளியாக மாறாத நிலையில் வெளியிலிருந்து அவர்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஆட்சியை நடத்துவது கடினம் என்பதால், நடாளுமன்றத் தேர்தலொன்றுக்கு செல்வதே சிறந்ததென ஜனாதிபதி அப்போது குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை -

நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து அதிக ஆசனங்களைப் பெற்றாலும் போதும், அதை வைத்துக்கொண்டு சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைக்க முடியுமென்றும் ஜனாதிபதி அங்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலொன்றுக்கு செல்வது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தாம் பேச்சு நடத்தவுள்ளார் [illegible] ஜனாதிபதி மேலும் தெரி[illegible] அறியமுடிந்தது. (க)

# மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 28

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ளவர்களின் பங்கீட்டு அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் ஐயனார் கோயில் வீதியிலுள்ள ரி.ரட்ணவடிவேல் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வழங்கப்படவிருக்கின்றது.

ஜே/97, ஜே/98, ஜே/99, ஜே/100, ஜே/101, ஜே/125, ஜே/127, ஜே/128, ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே விநியோகம் இடம்பெறவுள்ளது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# மிதக்கும் கப்பலாகிவிட்ட நிலையில் யாழ்.குடாநாடு

யுத்த நடவடிக்கைகளின்போது அப்பாவிப் பொதுமக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்தும் போக்குக் குறித்துக் காலத்துக்குக் காலம் அறிந்து வந்திருக்கிறோம்.

ஆனால், உணவையும் மனிதாபிமான சேவைகளையும் ஆயுதமாகப் பயன்படுத்தும் போக்குக் குறித்து இப்போது மீண்டும் செய்திகள் வெளியாகும் நிலைமை நேர்ந்திருக்கின்றது.

2002 இல் அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் தமிழர் தாயகம் மீது பொருளாதாரக் கட்டுப்பாடு - தடை - என்ற பெயரில் உணவையும், அத்தியாவசிய மனிதாபிமான சேவைகளையும் எட்டவிடாமல் தடுக்கும் கொடுமை நிகழ்ந்தது. அது இப்போது மீண்டும் நடைமுறைக்கு வந்திருக்கின்றது - சிறிய மாற்றத்தோடு.

முன்னர் அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகள் மீது மட்டுமே முழு அளவில் இடம்பெற்ற இந்த விநியோகத் தடை, இப்போது, அரச கட்டுப்பாட்டில் உள்ள சில தமிழ்ப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. அதுவே, அந்த சிறிய மாற்றம்.

வடக்கு - கிழக்கில் சிக்குப்பட்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களுக்கு உணவும் மற்றும் உரிய தகவல்களும் கிடைக்காமல் தடுக்கும் நடவடிக்கையை எடுத்திருக்கும் அரசுத் தரப்பு, அதன் மூலம் மனிதநேயச் செயற்பாடுகளை யுத்த ஆயுதங்களாகப் பயன்படுத்த முனைகின்றது என்று சர்வதேச பாதுகாப்பு வட்டாரங்கள் கடும் விசனத்தை வெளிப்படுத்தி உள்ளன.

''அத்தியாவசியப் பொருள்களும், தகவல்களும் வடக்கு - கிழக்கில் உள்ள மக்களுக்குக் கிடைக்காமல் தடுத்திருப்பதன் மூலம் கொழும்பு நிர்வாகம், அத்தியாவசிய, மனிதாபிமான சேவைகளை யுத்த ஆயுதங்களாகப் பயன்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டு, சர்வதேச சட்டங்களையும், நியமங்களையும் மீறி வருகின்றது என்பதே பொதுவாக நிலவும் கருத்தாகும்.'' - இவ்வாறு சுவிட்ஸர்லாந்தை மையமாகக் கொண்டு இயங்கும் 'சர்வதேச உறவு மற்றும் பாதுகாப்பு வலைப் பின்னல்' என்ற அமைப்பு தெரிவித்திருக்கின்றது.

இதேவேளை, யாழ். குடாநாட்டு நிலைமை குறித்து கருத்துத் தெரிவித்திருக்கும் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அத்தியாவசியத் தேவைகளைத் தடுத்திருப்பதன் மூலம் மக்களை 'சமூக சித்திரவதைக்குள்' அரசு ஆழ்த்தியிருப்பதாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

இந்தப் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமிழர் தாயக மக்களின் அவல நிலையை வெளிக்கொணரும் நோக்கிலும், ஏ-9 கண்டி வீதி விநியோக மார்க்கத்தைத் திறக்கும்படி அரசை வலியுறுத்தியும், நேற்று நாடாளுமன்றத்திற்குள் நட்ட நடுவில் அமர்ந்து, முழு நாளும் சத்தியாக்கிரகப் போர் நடத்தியிருக்கின்றார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

அதேநேரம், குடாநாட்டின் அவல நிலைமை குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் லார்ஸ் ஜோன் ஸோல்வ் பேர்க்கும் அபாய அறிவிப்பு வெளியிட்டிருக்கின்றார்.

யாழ். சமூகத்தின் சகல பொதுச் செயற்பாடுகளும் - கட்டமைப்புகளும் - செயலிழக்கும் கட்டத்தை அடைந்திருக்கின்றன என எச்சரித்திருக்கும் அவர், தரைவழித் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்ட நிலையில் இருக்கும் யாழ்.குடாநாட்டை ''வெறுமனே மிதக்கும் கப்பல்'' - என்றும் விமர்சித்திருக்கின்றார்.

விநியோகங்களின்றி - சரியான மார்க்கத்தில் வழிப்படுத்தும் மாலுமிகளின்றி - நட்ட நடு சமுத்திரத்திலே தத்தளிக்கின்ற - 'குடாநாட்டுக் கப்பலை' மீட்பது எப்படி என்பதே இன்றைய கேள்வி.

மனிதாபிமான சேவைகளை யுத்த ஆயுதங்களாகப் பயன்படுத்து வோரிடமிருந்தும் -

கருத்துச் சுதந்திரத்துக்குத் தடை போடுவதன் மூலம் உண்மை நிலைவரம் வெளியேவராமல் அமுக்கப் பண்ணுபவர்களிடமிருந்தும் -

சமூகச் சித்திரவதையை முன்னெடுப்பவர்களிடமிருந்தும் -

தாழப் போகும் 'கப்பலை' விரைந்து காப்பாற்ற வேண்டிய வேளை எழுந்திருக்கின்றது.

'கப்பலுக்கான' விநியோக மார்க்கத்தை முதலில் ஏற்படுத்துவதுதான் கப்பலைக் காப்பதற்கான முதற்படியாக இருக்க முடியும்.

மூடப்பட்டுள்ள தரைவழிப் பாதையைத் திறப்பது தான் வடக்கிற்கான - குறிப்பாக யாழ். குடாநாட்டிற்கான - விநியோகத்தைச் சீர்செய்வதோடு இயல்பு நிலையை ஏற்படுத்தும் நடவடிக்கையாகவும் அமையும்.

இராணுவ மூலோபாயங்களையும், அரசியல் தந்திரோபாயங்களையும் ஒளிவு மறைவுத் திட்டங்களாக வைத்துக் கொண்டு, விநியோக மார்க்கத்துக்குத் தடை போடுவது இயல்புநிலை ஏற்படுவதற்குக் குந்தகமாக அமைவதோடு, மேலும் சர்வதேச விமர்சனங்களையும், கண்டனங்களையும் தோற்றுவிக்கும் என்பதை சம்பந்தப்பட்டோர் உணர்ந்து கொள்வது நல்லது.

அவர்கள் நிலைமையைச் சீர்செய்ய முன்வராவிட்டால், சர்வதேச சமூகமே முன்வந்து தானாக இங்கு நிலைமையைச் சீர்செய்ய வைக்கும் நடவடிக்கைகளை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படும் நிலை வரலாம்.

சம்பந்தப்பட்டோருக்கு இத் தகவல் சமர்ப்பணம்.

இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்துவதற்கு ஆட்சேபம்:

# புலிகளை இந்துத் தீவிரவாதிகள் என்று ஏன் அழைக்கக்கூடாது என்கிறார் முஷாரப்

வாஷிங்ரன், செப்.28

இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று பொதுவாக சொற்பிரயோகம் செய்யப்படுவதைத் தான் கடுமையாக எதிர்ப்பதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்தார். இந்துக்களான விடுதலைப் புலிகளை இந்துத் தீவிரவாதிகள் என்று ஏன் அழைப்பதில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நியூயோர்க்கில் அவரது சுயசரிதை நூலாக 'இன் த லைன் ஒப் ஃபயர்' வெளியீட் டுக்குப் பின் 'பொக்ஸ்' தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு அவர் சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அமெரிக்க அதிபர் எனது நண்பர். இஸ்லாமிய தீவிரவாதிகள் என்று பிரயோகம் செய்யவேண்டாம் என்று அவருக்கு ஆலோசனை கூறுவேன். அவர் இதிலுள்ள நியாயத்தைப் புரிந்துகொள்வார் என்ற திடமான நம்பிக்கை உள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தானியர்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர். தீவிரவாதத்துடன் இஸ்லாம் மதத்தை இணைத்து பேசப்படுவது மிகவும் வேதனை அளிக்கிறது. தீவிரவாத முத்திரை இஸ்லாம் மதத்தின்மீது திட்டமிட்டு குத்தப்படுகிறது.

ஒசாமா பின்லேடன் மீதான அமெரிக்காவின் நடவடிக்கையை நான் தடுக்கும் பேச்சுக்கே இடமில்லை. பின்லேடனை தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் பாகிஸ்தான் மெத்தனமாக இருப்பதாகக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பின்லேடன் இறந்துவிட்டதாக செய்திகள் வந்துள்ளன. அதன் உண்மைத் தன்மை குறித்து ஆராய வேண்டும். இப்போது அது பற்றி ஏதும் கூற இயலாது.



பயங்கரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து மிகச் சிறப்பாகச் செயற்படுகின்றன. அமெரிக்காவுடனான உறவு குறித்து பாகிஸ்தானியர்கள் மகிழ்ச்சியாக இல்லை என்பது உண்மைதான். இருதரப்பு நலனுக்கு இது தேவையானதே என்பதை அவர்கள் படிப்படியாக உணருவர்.

2001 செப்டெம்பர் 11இல் அமெரிக்காவில் உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீது நடந்த தாக்குதலுக்குப் பிறகு, பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் ஒத்துழைக்காவிடில் பாகிஸ்தான் மீது குண்டு வீசுவோம்; கற்காலத்துக்கு திரும்பிச் செல்லத் தயாராக இருங்கள் என்றும் அமெரிக்கா மிரட்டியது. அது மிகவும் முரட்டுத் தனமான பேச்சு. அது எங்களை அவமானப்படுத்தும் வகையில் இருந்தது.

ஆனால், நான் பொறுப்பான முறையில் நடந்துகொண்டேன். நாட்டு நலன் கருதியே ஒருவர் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும். அவ்வாறே நான் செயற்பட்டேன் என்றார் முஷாரப்.

(ஐ)

# எரிபொருள் வழங்குவது ஒழுங்கின்மையால் சிற்றூர்திசேவைகள் இடைநிறுத்தப்படலாம்

## வடமராட்சி தனியார் சிற்றூர்தி சங்கத் தலைவர் அச்சம்

கரவெட்டி, செப்.28

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பருத்தித்துறை - யாழ். வழிக்கான சேவைகள் யாவும் எந்நேரத்திலும் இடை நிறுத்தப்படலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளார் வடமராட்சி தனியார் சிற்றூர்திச் சங்கத் தலைவர் எஸ்.புலேந்திரன்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வலிகாமம் பகுதியில் தனியார் பஸ் சேவை மேற்கொள்பவர்களுக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு தனிவழிப் போக்குவரத்துச் சேவையின் போதும் ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிலையங்கள் மூலம் எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டுவருகின்றது.

ஆனால், வடமராட்சி எரிபொருள் நிலையங்களில் இவ்வாறான செயற்பாடுகள் எதுவுமில்லை. குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டுமே சிற்றூர்திகளுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படுகின்றன.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையின்போதும் நாம் மக்களின் நலனில் அக்கறை கொண்டு கட்டண உயர்வு கூடச் செய்யாமல் சேவைபுரிந்து வருகின்றோம்.

75 வாகனங்கள் மக்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுவந்தன. தற்போது 25 வாகனங்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவை புரிந்து வருகின்றோம்.

இந்நிலையில், வடமராட்சியில் உள்ள எரிபொருள் நிலையங்கள் மூலம் உரியமுறையில் எரிபொருள் விநியோகம் செய்யப்படாது விட்டால் பஸ் சேவைகளை இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து சிற்றூர்தி சேவையைத் தொடர்ந்து நடத்த உதவ வேண்டும் - என்றார். (ப-70-203)

# வவுனியாவில் கைதான இளைஞருக்கு விளக்கமறியல்

வவுனியா, பூவரசங்குளம் விமானப் படை முகாமைத் தாக்கமுயன்ற சமயம் கைதுசெய்யப்பட்டவர்கள் எனத் தெரிவித்து ஏழு தமிழ் இளைஞர்கள் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்செய்யப்பட்டபோது அவர்களை அடுத்த மாதம் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த ஏழு பேரையும் ரி-56 போன்ற ஆயுதங்கள் சகிதம் இராணுவத்தினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவித்து, இவர்களை பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸார் நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் தனஞ்செய திலகரட்ன முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

அப்போதே அவர்களை அடுத்த மாதம் 27ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்கும் உத்தரவை நீதிவான் வழங்கினார். (உ)

# நிட்டம்புவ பகுதியில் வைத்து தமிழ் இளைஞர் பிஸ்ரலுடன் கைது

கொழும்பு, செப். 28

கம்பஹா மாவட்டம் நிட்டம்புவ பொலிஸ் பிரிவில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவரை பிஸ்டல் சகிதம் நேற்றுக் காலை நிட்டம்புவப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தனகல்ல பகுதியில் சந்தேகத் திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞரை விசாரித்து சோதனையிட்டபோதே அவரிடம் பிஸ்டல் ஒன்று இருந்தமை தெரியவந்தது என்று பொலிஸார் கூறினர்.

பிரஸ்தாப இளைஞர் அத்தனகல்லப் பகுதியிலுள்ள சிங்கள இளைஞர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தமையும் விசாரணைகளின்போது தெரியவந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தகவலின் அடிப்படையில் குறித்த சிங்கள இளைஞரும் விசாரணைக் குட்படுத்தப்பட்டார்.

சந்தேகநபரைப் பொலிஸார் நிட்டம்புவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளனர்.

(க)

# மழைவேண்டி நவாலியில் பூசை

யாழ்ப்பாணம், செப்.28

பெரும்போக நெற்செய்கைக்கு மழைவேண்டி நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு இடம்பெறவுள்ளது.

களையோடை கண்ணகை அம்மன் ஆலய பிரதமகுரு சிவத்திரு. கந்தையா நாகேந்திரம் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

(ப-95)

# அபிவிருத்தி கலந்துரையாடல்

அபிவிருத்தித் திட்டங்கள், சுகாதார செயற்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் முற்பகல் 10 மணிக்கு யாழ். மாநகரசபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து சனசமூக நிலையப் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு யாழ். மாநகர ஆணையாளர் எம்.எஸ்.சரவணபவ தெரிவித்துள்ளார்.

(79-203)

# மீனவருக்கு ஏற்பட்ட இழப்புகள் மற்றும் மாற்றுத் தொழில் ஏற்பாடு பற்றி ஆய்வு

நல்லூர், செப். 28

கடலில் காணாமற்போன வலைகள் உட்பட்ட கடற்றொழில் உபகரணங்களுக்கு ஏற்பட்ட நட்டம் அல்லது இழப்புகள் தொடர்பான விவரங்களைத் திரட்ட யாழ்ப்பாணம் கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்குப் பின் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து முன்தாக அவர்களால் கடலில் போடப்பட்ட வலைகள் மற்றும் மீன்பிடி சாதனங்களைத் திரும்பப் பெற முடியாதிருந்தது.

இது தொடர்பாகவும் தொழில்களை இழந்திருக்கும் மீனவர் குடும்பங்களுக்கு கடற்றொழிலோடு தொடர்புடைய மாற்றுத் தொழில்களை வழங்கக் கூடியதாக தொழில்களை அடையாளப்படுத்துவது குறித்தும் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மாற்றுத் தொழிலுக்கான வேதனங்களை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும் தெரிகின்றது.

யாழ்ப்பாணம் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் தலைமையில் யாழ்.கடற்றொழில் திணைக்களத்தில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவ ரட்ணம், உலக உணவு விவசாய நிறுவனப் பிரதிநிதி, பிரதேச கடற்றொழில் பரிசோதகர்கள், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

மாற்றுத் தொழில் வழங்குதல் மற்றும் கடலில் விடப்பட்ட தொழில் சாதனங்களுக்கான அனைத்து விவரங்களையும் அந்தந்த பிரதேச கடற்றொழில் பரிசோதகர்கள் திரட்டி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

(ப-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50ஆவது பிறந்தநாள் வாழ்த்து

**கந்தசாமி கோபாலசிங்கம் (சிற்பாசாரியார்)**



வட்டுக்கோட்டை, அராலியைச் சேர்ந்த கந்தசாமி மனோன்மணி தம்பதிகளின் புதல்வன் கோபாலசிங்கம் தனது 50ஆவது பிறந்த தினத்தை 28.09.2006இன்று கொண்டாடவுள்ளார். இவரை அன்பு அப்பா, அம்மா, மனைவி தேவராணி, பிள்ளைகள் சுபா, தினேஷ், தீபா, தாரா, தம்பிமார், தங்கைமார், மாமி, மச்சான்மார், மச்சாள்மார், மருமகன்மார், மருமகள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டுகாலம் வாழ்கவென மனமார வாழ்த்துகின்றார்கள்.

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.*

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

## சேவைநலன் பாராட்டு



*எமது வித்தியாலயத்தில் கணித ஆசிரியராக, விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக, உப அதிபராக அரும் பணியாற்றி இன்று (28.09.2006) இல் தமது 29 வருடகால ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும்*

**அ. பீற்றர் தர்மநாயகம்**

*அவர்களின் சேவையைப் பாராட்டி ஓய்வு காலத்தில் அவர் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.*

**சேவை விவரம்:**

கே/ஸ்ரீ கதிரேசன் த.வி.- தெரணியகல - 03.06.77 - 11.01.81
யா/பலாலி ஆ.ப.கலாசாலை (கணிதம்) - 12.01.81 - 31.12.83
யா/சென். ஜோசப் வித். கொழும்புத்துறை - 01.01.84 - 28.09.2006

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அ.சங்கம்.

**யா/சென். ஜோசப் வித்தியாலயம்,**
**கொழும்புத்துறை.**


## பாக்யா இசைப் பயிலகம்

*மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு*

**02.10.2006 திங்கட்கிழமை விஜயதசமியாகிய நன்நாளில் இசை, இசைவாத்திய வகுப்புகள் பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.**

- மிருதங்கம்
- வயலின்
- ஓகன்
- புல்லாங்குழல்
- வாய்ப்பாட்டும், பண்ணிசையும்.

**இன்று முதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.**

*தொடர்பு:* பாக்யா காகிதாதிகள்
121, கே.கே. எஸ்.வீதி, கொக்குவில்.

(53751)


## கண்ணீர்ப் பூக்கள்

எமது வித்தியாலய ஆசிரியர் சி.சிவகுமார் அவர்களின் பாசமிகு சகோதரன்



**அமரர் சி.சிவசங்கர்** அவர்களுக்கு

(விஞ்ஞான பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

15.08.2006இல் ஏற்பட்ட திடீர் மறைவால் துயருற்றிருக்கும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேம்படி விநாயகன் பாதங்களில் பணிகின்றோம்.

*யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.*
*கண்டி வீதி, மீசாலை.*

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

*அமரர் வல்லிபுரம் பாலசுந்தரம்*

(இளைப்பாறிய CTB உத்தியோகத்தர்)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பாலசுந்தரம் 26.09.2006 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பாலாம்பிகை (கொழும்பு), இளங்கோ (பிரான்ஸ்), மஞ்சுளா (ஜேர்மனி), கீதாஞ்சலி, இளவரதன் (U.K), வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் தியாகராசா (பிரான்ஸ்), விஜயரத்தினம், ஜீவரெத்தினம், தில்லைநாதன், தர்மகுலசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கெங்காதரன் (கொழும்பு), கிரிஜா (பிரான்ஸ்), ஜீவச்சந்திரன் (ஜேர்மனி), கருணாநிதி, நர்மிதா (U.K), விஜயராஜா ஆகியோரின் பாசமிகு மாமனும் கலைவாணி, குருபரன், பராபரன், தனுஜா, இனுஜா, பானுசன், ஜெனி, அபி, பாலகுமரன், கார்த்திகன், அனோஜா, விதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் துரைசிங்கம், புவிபாலசிங்கம், மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று நண்பகல் 12 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாவகச்சேரி.*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


## விற்பனைக்கு

தூய இன Coker Spaniel 1½ மாத வயதுடைய 2 ஆண் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. மனோன் மாஸ்ரர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய்

## வீடு வாடகைக்குண்டு

நாவலர் வீதி, பெருமாள் கோயிலடியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: **T.P. 3393**

## தேவை

கல்பேட் உடன் தேவை. நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (ICRCசந்திக்கும் கைலாசபதி சந்திக்குமிடையில்)


## காணாமற்போன இருவர் குறித்து ஆணைக்குழுவில் முறைப்பாடு

கல்வியங்காடு,செப்.28

தொண்டைமானாறுப் பகுதியில் இருவர் காணாமற்போனதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தொண்டைமானாறைச் சேர்ந்த வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருபவரான செல்லத்தம்பி செல்வகுமார் (வயது 41) என்பவரை கடந்த 22ஆம் திகதியிலிருந்து காணவில்லை என அவரது உறவினர்களால் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, சங்குவேலி வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை கணேஷ் (வயது 68) என்ற முதியவர் கடந்த 6ஆம் திகதி செல்லச்சந்நிதி ஆலயத்துக்குச் சென்றதாகவும் பின்னர் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் அவரது உறவினர்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர். (ப-79)

## பரிசாரகர்களுக்கான விசேட பயிற்சிகள்

கல்வியங்காடு,செப்.28

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றவிருக்கும் பரிசாரகர்களுக்கான மூன்றுமாதகால விசேட பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகி உள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் சுகாதார பரிசாரகர்களில் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட 29 பரிசார கர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புகளே நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-79)

## இலவச பண்ணிசை வகுப்புகள் ஆரம்பம்

கல்வியங்காடு,செப்.28

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் இலவச பண்ணிசை வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் பிரதேசத்தில் உள்ள அறநெறிப் பாடசாலைகளான இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, மாதகல் விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை, வடலியடைப்பு இந்து இளைஞர் சங்க அறநெறிப் பாடசாலை போன்றவற்றில் இப்பண்ணிசை வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டு வருவதாகவும் விரும்புவோர் அந்தந்த அறநெறிப் பாடசாலைகளில் இணைந்து பயிற்சிபெற்று பயனடையுமாறு வலிகாமம் பிரதேசத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் அறிவித்துள்ளார். (ப-79)

## முடமாவடி சங்கக்கடை உடைத்துத்திருட்டு

திருநெல்வேலி முடமாவடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடைக்கப்பட்டு மா, அரிசி மூடைகள் என உணவுப் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் அதிகாலை கடையின்முன் கதவு உடைக்கப்பட்டு இப்பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. கடையின் வாசலின் வெளியேஅரிசிமூடை கிடந்ததைக் கண்ட பொதுமக்கள் முகாமையாளருக்கு தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து கிராம அலுவலர், பொலீஸ் ஆகியோருக்கு முறையிடப்பட்டுள்ளது. (ப-68)






## 45ஆம் நாள் நினைவலைகள்

**அமரர் சின்னையா சிவசங்கர்**

*(விஞ்ஞானபீடம், கணிதத்துறை (சிறப்பு) மூன்றாம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்)*

**(28.09.2006)**

மண்ணில்: 30.12.1982

விண்ணில்: 15.08.2006



எம் குடும்பத்தின் குலவிளக்கே சங்கர்
எம் இதயமதில் விடிவு தந்த விடிவெள்ளியே!
பொழுது புலர்வதன் முன் உன் ஒளி மங்கியதேன்
வஞ்சமிலா நெஞ்சமதில் இப்படியும் ஒரு மறுவா?
கண்டவர் கேட்டவர் ஏங்கி நின்றார்!
உன்னை ஈன்றவள் அந்தோ பரிதவித்தாள்.
உடன் பிறந்தோர் சிறகிழந்த அன்றிலானோம்
உற்றார் அயலவருடன் நண்பர் கண்களும் பனித்தன.
ஏனிந்த வேதனை யார் செய்த சோதனை
ஏதும் அறியோம் - இன்றும்
உன்னைத் தேடுகின்றோம் - இன்னும்
உன் வரவுக்காய் கண்களில் கண்ணீருடன்
காத்திருக்கின்றோம்.

உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்

*வெள்ளாம் போக்கட்டி,*
*கொடிகாமம்.*

**- குடும்பத்தினர்.**

## 7ஆம் ஆண்டு நீங்கா நினைவுடன்

தோற்றம்
22 - 12 - 1939



மறைவு
15 - 10 - 1999

திதி: 28-09-2006

அமரர் **ஆறுமுகம் கமலநாதன்**

(B.A. Dip. in. Education S.L.P.S. Grde I English)

(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்-வலிகாம வலயம்)

நிலையில்லா வாழ்வினிலே நீங்காத நினைவுகளை தந்துவிட்டு நிலையான வாழ்வுதேடிச் சென்றதேனோ. என்றும் உங்கள் நினைவுடன் எல்லாம் வல்ல காளி அம்பாளை வேண்டிநிற்கும்

*திருமதி ச.கமலநாதன்*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

அன்பு மனைவி,
மருமகன், சந்திரன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

## காரைநகர் பிரதேச சபை, காரைநகர்
## அலுவலக தளபாடம், உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலைகோரல்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள காரைநகர் பிரதேச சபையின் அலுவலகப் பாவனைக்காகக் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்களுக்கான கூறுவிலைகள் உற்பத்தியாளர்களிடம் அல்லது பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 500 உம், மீளளிக்கக்கூடிய பணமாக ரூபா 5,000 உம் செலுத்தல் வேண்டும். இச்சபையால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தில் கேட்டுக்கொண்ட தன்மைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டு 10.10.2006ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் இச்சபையில் கிடைக்கக்கூடியதாக 'தலைவர், திணைக்கள கேள்விச் சபை, காரைநகர் பிரதேச சபை, காரைநகர்' என்ற முகவரியிட்டு ப்திவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ காரைநகர் பிரதேச சபையில் உள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'காரைநகர் பிரதேச சபை அலுவலகத் தளபாட உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலைகள்' என குறிப்பிடப்படல் வேண்டும். 10.10.2006ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரதோ அல்லது அவரின் பிரதிநிதியோ பிரசன்னமாகலாம். வழங்கல் கட்டளை கிடைத்து 15 நாள்களுக்குள் பொருள்கள் யாவும் இச்சபையின் களஞ்சிய காப்பாளரிடம் ஒப்படைக்கவேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் வழங்கப்படும் கடைசித் திகதி 05.10.2006 ஆகும்.

**உருக்குத் தளபாடங்கள்**

அ. அலுவலக அலுமாரி
ஆ. கோவை அலுமாரி
இ. அலுவலக மேசை பெரியது
ஈ. அலுவலக மேசைகள்
உ. அலுவலக மேசை சிறியது
ஊ. இரும்புப் பெட்டகம்
எ. காசுப் பெட்டி சிறியது
ஏ. சுழல் கதிரை
ஐ. கணனிக் கதிரைகள்

**அலுவலகத் தளபாடங்கள் (வேம்பு, முதிரை)**

அ. மாநாட்டு மேசை
ஆ. கைபிடிக் கதிரைகள்
இ. கணனி மேசைகள்

**அலுவலக உபகரணங்கள்**

அ. ரோணியோ இயந்திரம்
ஆ. கணனி இயந்திரங்கள்
இ. நிழற் பிரதி இயந்திரம்

திருமதி ம.வசந்தகுமார்
தலைவர்,
திணைக்கள கேள்விச்சபை.

காரைநகர் பிரதேச சபை,
காரைநகர்.

# மரண அறிவித்தல்கள்

## இரத்தினம் சண்முகானந்தநடேசர்



வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சண்முகானந்தநடேசர் (பொறியியலாளர்) அவர்கள் 26.09.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அரியமலரின் அன்புக் கணவரும் சுஜீவ், விஜீவ், சாயினி, ரோஜீவ் ஆகியோரது அருமைத் தந்தையும் காலஞ்சென்ற இரத்தினம் - அமுதம்மா தம்பதியரின் அன்பு மகனும் முருகுப்பிள்ளை - மகேஸ்வரியம்மா தம்பதியரின் அருமை மருமகனும் தனககாமாட்சியம்மா, தவலட்சுமி, சூரியவதி, சந்திரவதி, கருணாதேவி, தவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேலாயுதம், குகானந்தன், தவதேவஜெகராசா, சீவரத்தினம், சர்வேஸ்வரன், ஜெயரதி ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுப்ரியல் ஹோம், வட்டுமேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## முத்தையா இராசநாயகம் (ஆசாரியார்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், பூநகரியை வசிப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு பத்திரகாளி கோயிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இராசநாயகம் 26.09.2006 செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும் மல்லிகாரதி (கனடா), பேரின்பரதி, விஜயமாலா, முருகதாஸ் (கனடா) ஆகியோரின் தந்தையும் சிறிதரனின் (கனடா) மாமனும் பவித்திரன் (கனடா), பானுஷா (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடிலேன், திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3475.

தகவல்:
குடும்பத்தினர்.

# நாட்டில் அமைதி வேண்டி திருமுறை திருத்தாண்டகம் முற்றோதல் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம்,செப். 28

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நாட்டில் சாந்தி சமாதானம் நிலைக்கவும் யுத்த சூழ்நிலையைத்தவிர்க்கவும் யாழ். குடாநாட்டு ஆலயங்களில் பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றனர்.

கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் ஆறாந்திருமுறை திருத்தாண்டகம் முற்றோதல் ஆரம்பமாகித் தொடர்ந்து தினமும் காலைப்பூசையுடன் நடைபெற்று வருகின்றது. அத்தோடு யாழ். குடாநாட்டில் நிலவும் வரட்சி நீங்கி மழைபெய்யவும் மழைப்பதிக பாராயணமும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

# குழந்தைகள் பாதுகாப்புக்கு நுளம்புவலை விநியோகம்

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள ஒருவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின்மூலம் நுளம்புவலைகள் வழங்கப்படவுள்ளன. சாவகச்சேரிப் பகுதியில் இயங்கிவரும் நலன்புரி நிலையங்களில் 15 பேரும் பருத்தித்துறைப் பகுதியில் இயங்கிவரும் நலன்புரி நிலையங்களில் 22பேரும் யாழ்ப்பாணம் பகுதியில் இயங்கிவரும் நலன்புரி நிலையங்களில் 57 பேரும் உள்ளனர் என யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தின் புள்ளிவிவரம் மூலம் தெரிய வந்துள்ளது. (ப-51)

# நெடுந்தீவு பிரதேச சபையின் செயலாளர்

நெடுந்தீவு பிரதேச சபையின் செயலாளராக கோ.தம்பிராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சபையின் செயலாளராகப் பணியாற்றிய எஸ்.தில்லைநாதன் தனது பதவியில் இருந்து ஓய்வுபெற்றதையடுத்து இந்த நியமனம் வழங்கப்படவுள்ளது. (ப-111)

# நவராத்திரி விழா

சுழிபுரம்,செப். 28

பண்ணாகம் ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய வாலிபர் சங்கத்தினர் நிலைய மண்டபத்தில் தினமும் பிற்பகல் நவராத்திரி விழாவைக் கொண்டாடி வருகின்றனர். (28)

* * *

குருநகர்,செப்.28

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வாணிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் இரண்டாம் திகதி முற்பகல் 11 மணிக்கு அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. (51-203)

* * *

யாழ்ப்பாணம்,செப்.28

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளின் அனுசரணையுடன் நடத்திவரும் நவராத்திரி விழாவில் இன்று நீர்வேலி காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலையில் நவராத்திரி விழா நடைபெறவுள்ளது. இதில் 'வேதங்களில் அம்பிகை வழிபாடு' என்னும் தலைப்பில் சைவப் புலவர் கந்தசத்தியதாசன் சொற்பொழிவாற்றவுள்ளார். (79-203)

# ஆயுதமுனையில் பணம் கொள்ளை

கொழும்பு, செப். 28

கொழும்பு - மருதானைப் பகுதியிலுள்ள புத்தகக் கடையொன்றில் இனந்தெரியாத கும்பல் ஒன்று 35 லட்சம் ரூபா பணத்தை ஆயுதமுனையில் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது என்று கடை உரிமையாளர் மருதானைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று மருதானைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியில் பங்கு பற்றிவிட்டு மருதானைக் கடைக்கு வந்த பின்னர் அங்குவந்த கொள்ளைக் கும்பல் ஒன்று அங்கு நின்றோரை ஆயுதத்தைக் காட்டி மிரட்டிவிட்டு 35 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மருதானைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி தலைமையிலான விசேட பொலிஸ் குழுவினர் விசாரணை நடத்திவருகின்றனர்.

இக்கொள்ளை தொடர்பாக கடையில் வேலைசெய்யும் ஊழியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# கொழும்பு, கம்பஹா, களுத்துறையில் டெங்கு நோய்க்கு 34 பேர் பலி!

கொழும்பு, செப். 28

மேல்மாகாணத்திலுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் கடந்த தாமதங்களுக்குள் 34 பேர் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளனர் என்று மேல்மாகாண சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

டெங்கு நோயினால் கொழும்பு மாவட்டத்தில் 2,115 பேர் பாதிக்கப்பட்டனர் அவர்களில் 7 பேர் உயிரிழந்தனர். கம்பஹா மாவட்டத்தில் 1,284 பேரில் 7 பேர் உயரிழந்தனர். அத்துடன், களுத்துறை மாவட்டத்தில் 663 பேரில் ஒருவர் உயிரிழந்தார். கொழும்புப் பகுதியில் பருவமழை பெய்துவருவதால் டெங்கு நோய் மேலும் பரவக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்றும் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம், தடுப்புப் பிரச்சாரம் மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் டெங்கு தடுப்புப் பிரிவு மேற்கொண்டுவருகிறது.

சுற்றாடலை மாசுபடுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (ஐ-10)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி இராஜராஜேஸ்வரி சத்தியசீலன் அவர்களின் அன்புத் தந்தை

## நாகநாதர் தனபாலசிங்கம்

அவர்கள் 26.09.2006 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,
கல்லூரிச் சமூகம், வதிரி.

# சேவைநலன் பாராட்டும், பணிதொடர வாழ்த்துக்களும்

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தித்துறையின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையளராகப் பண்பார்ந்த சேவை நல்கி அறுபதாம் அகவை கண்டு இனிதே ஓய்வுபெற்ற

**உயர்திரு. சி.ஐயாத்துரை**

அவர்களை நன்றி பொங்க வாழ்த்துகின்றோம். எல்லா நலன்களும் பெற்று நிறைவாழ்வு கண்டு பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இத்துறையின் பணிக்காக நியமனம் பெற்று அரும்பணி தொடரும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

**உயர் திரு. எஸ்.கனகசபாபதி**

அவர்களை நெஞ்சார வரவேற்று சேவையால் சிறப்பெய்த எம் இனிய வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பனை, தென்.வள.
அபி.கூ.சங்கம், சுன்னாகம்.

அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

817 நீலம்

வெற்றி இலக்கங்கள்

07 08 09 44

மிதுனம்

26-09-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4550582 - 4567265

ஜக்பொட் பரிசு ரூபா. 1,798,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 364,406 | 10/- | 3,644,060/- |
| 2 இலக்கங்கள் | 33,510 | 20/- | 670,200/- |
| 1 இல. + லக்கினம் | 33,180 | 30/- | 995,400/- |
| 2 இல. + லக்கினம் | 3,021 | 100/- | 302,100/- |
| 3 இலக்கங்கள் | 873 | 500/- | 436,500/- |
| 3 இல. + லக்கினம் | 95 | 5,000/- | 475,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | | 1,798,200/- | - |
| மொத்தம் | | | 6,923,260/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 435,094 | | 7,946,760/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,611,900/-

தொடர் இல.5444898 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 செப்டம்பர் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 4552349-7-11 |
| புத்தளம் | 4565145-5-87 |
| கம்பஹா | 4550643-9-10 |
| காலி | 4556658-1-33 |
| இரத்தினபுரி | 4555105-5-19 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 06 * 11 * 1959



விண்ணில் 15 * 08 * 2006

## சாம்பசிவம் பாஸ்கரன்

அன்பால் வழிநடத்தி, ஆதரவு காட்டி
இன்று எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டு எங்கு சென்றீர் – எம் தந்தையே!
உம் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்
அப்பா உங்களைத் தென்றலில் உணர்கின்றோம்
அப்பா உங்களை வானில் காண்கின்றோம்
அப்பா உங்களைச் சூரியனாய் பார்க்கின்றோம்
அப்பா உங்களை மலர்களில் நுகர்கின்றோம்
பாரினில் நாம் உள்ளவரை எங்கும்
எங்கெங்கிலும் உங்களையே எண்ணியபடி....

*உங்கள் நினைவாக,*
(சி/51062) **மனைவி, பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி கந்தையா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்தையா நேற்று (27.09.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (**Inspector Of labour, Port Commission**) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி பர்வதாதேவி இராஜேஸ்வரன் (பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகம், இலங்கை மின்சார சபை), **Dr** பசுபதி ராஜா (அநுராதபுரம்) ஆகியோரின் அன்புத் தாயும் ந. இராஜேஸ்வரன், திருமதி **Dr.** பவானி பசுபதிராஜா (**DPDHS**, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சபாரெத்தினம் (சபாஸ் ஸ்ரோஸ்),காலஞ்சென்ற திருமதி தையல்நாயகி மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிருசன்(யாழ். இந்துக் கல்லூரி), சுவேதிகா (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), கிருத்திகா (திருக்குடும்ப கன்னியர் மடம், வவுனியா) ஆகியோரின்அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*99, சிவன்கோயில் வடக்கு வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (53972)

*தகவல்:*
**ந.இராஜேஸ்வரன்** *(மகன்)*

## வைத்திலிங்கம் சிறிதரன்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிறிதரன் நேற்று (27.09.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் -பாக்கியம் தம்பதியரின்அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைராஜா - சிவமலர் தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தகுமாரியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் அகல்விழியின் பாசமிகு தந்தையும் இந்திரா, மனோகரன் (மன்னார்,**C.T.B.**), தயாபரன் (நோர்வே), ரவீந்திரன் (உரிமையாளர், சயன் உணவகம், மல்லாகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பத்மநாதன், கமலேஸ்வரி, புஸ்பராணி, அருட்செல்வி ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொரளை மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (28.09.2006) வியாழக்கிழமை கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

*தகவல்:*
**தாய், சகோதரர்கள்.**

## இளையதம்பி சின்னத்தம்பி(சின்னப்பு)

(வீமன்காமம்-தெல்லிப்பழை, கோப்பாய்-ஆசாரியார்)

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தி, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சின்னத்தம்பி நேற்று (27.09.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் தவமணிதேவி(பொன்னரியம்), கணபாலன் (சந்திரன்- டோகா) ஆகியோரின் தந்தையும் ஜெகநாதன், உதயமலர் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.09.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோப்பாய்.** (53966)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# உழவு இயந்திரத்தில் இருந்து தவறி வீழ்ந்து மரணம்

தென்மராட்சி,செப்.28

விறகு ஏற்றி வந்த உழவு இயந்திரத்தின் துலாவில் நின்று பயணித்தவர், தவறி வீழ்ந்து சக்கரத்தினுள் சிக்கிப் பலியானார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தவசிகுளம் நாச்சிமார் கோயிலடியில் இடம்பெற்றது.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த நாகராசா நவரத்தினம் (வயது 40) என்பவர் சம்பவத்தில் காயமடைந்து மிருசுவில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது மரணமானதாக தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் உழவு இயந்திரத்தின் சாரதியைக் கைது செய்துள்ளதாகவும் , இறந்தவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1)

# பாடசாலை கற்றல் உபகரணங்கள் திருட்டு

தென்மராட்சி கிழக்கு,செப்.28

வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலையில் கடந்த மாதம் ஊரடங்கு அமுலில் இருந்த போது அறைகள் பலவும் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த கற்றல் உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இதேவேளை, அங்கு பொருத்தப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த நீர்ப்பம்பியும் களவாடப்பட்டுள்ளதாகவும் -

இதனால் பாடசாலைத் தேவைக்கு நீரைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-122)

# உயர் தொழில்நுட்ப மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் செய்யப்படவுள்ளன.

அதன் பொருட்டு அவர்களை தேசிய அடையாள அட்டையுடன் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நிறுவனத்துக்கு வருகைதருமாறு அதன் பணிப்பாளர் வி.கருணாநிதி கேட்டுள்ளார். (1-203)

# கொப்பறாவுக்கு நல்ல மவுசு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்ப்பாணத்தில் கைவிடப்பட்ட கொப்பறாத் தேங்காய்களுக்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து தேங்காய் எண்ணெய் விலை அதிகரித்திருப்பதுடன் எண்ணெய் கிடைப்பதும் அரிதாகவிருக்கின்றது.

இந்நிலையைத் தொடர்ந்து தென்னம் வளவுகளில் கைவிடப்பட்ட செத்தல் தேங்காய்களை தேடியெடுத்து எண்ணெய் வடிக்கும் நடவடிக்கையில் பொதுமக்கள் ஈடுபட்டுவருகின்றதைக் காணக்கூடியதாக உள்ளது.தற்போது தேங்காய் எண்ணெய் லீற்றர் சுமார் இருநூற்றி ஐம்பது ரூபாவுக்கு மேல் விற்பனையாகின்றது. (68)

# கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுக்கு இன்றும் நாளையும் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியின் உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கான ஜூலை, ஓகஸ்ட் மாதங்களுக்கான கொடுப்பனவுகள், இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் கல்லூரியில் இயங்கும் வங்கியில் நண்பகல் 12 மணிக்கு முன்னர் வழங்கப்படும்.

இதுவரை இக்கொடுப்பனவை பெறாதவர்கள் அதைப்பெற்றுக்கொள்ளுமாறும்-

மேற்படி இரண்டு தினங்களிலும் வந்து பெறாதவர்களுக்கு மேலும் ஒரு தினத்தில் இவை வழங்கப்படமாட்டாது என்றும் - கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார். (1-203)

## தவறிவிட்டது

*புத்தூரைச் சேர்ந்த கௌரிமலர் பாலசிங்கம் என்பவரின் (675580154V) தேசிய அடையாள அட்டையும் 0903024548 இலக்கமுடைய சரவணபவானந்தன் கௌரிமலரின் விசேட அடையாள அட்டையும் 26.09.2006 யாழ். ஆஸ்பத்திரி வீதி பஸ் நிலையம் அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலையில் ஒப்படைத்துதவவும்.*

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

புதிய **T.V.S XL SUPER HEAVY DUTY** சிகப்புநிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. இருபாலரும் பாவிக்கக்கூடியது.

தொடர்பு:
55, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.

# மாநகர சபை, யாழ்ப்பாணம் ஆதனவரி அறிவித்தல் - 2006

2006ஆம் ஆண்டு மூன்றாம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 29.09.2006ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்க் குறிப்பிடப்படும் விவரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத் தருகின்றேன்.

*வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15%*
*ஏனைய காணிகள் - 20%*

நிலுவை உட்பட 2006ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகரசபைக் கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252, பிரிவுXII252(1) இன்படி நடுக்கட்டல் மூலம்அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்

காசோலையாகச் செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(சி/51065)
மு.செ.சரவணபவ
**மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.**

## G.A.Q பேராதனை (வெளிவாரி)

★2006 ஆம் ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களின் பரீட்சைக்குரிய விண்ணப்பப் படிவம் வந்துவிட்டது.
★பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி 30.09.2006.
★2005 ஆம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளிவந்துவிட்டன.
விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.** (53939) **புதிய உயர் கல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தரான வ.தயானந்தா அவர்களின் பாசமிகு தாயாரான

### திருமதி மீனாட்சியம்மா வல்லிபுரம்

அவர்கள் கடந்த 23.09.2006 அன்று காலமான செய்தியைக் கேட்டு மிகவும் துயரடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தரும்,
நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம்,
கரவெட்டி.
(சி/51061)

## கண்ணீர் அஞ்சலி

*எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலராகக் கடமையாற்றிய*

### பவானந்தன் சஞ்சித்குமார்

*அவர்களின் மறைவினால் ஆழ்ந்த துயரடைகின்றோம்.*
*அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

(53961)
**நலன்புரிச் சங்கம்,**
**நல்லூர் பிரதேச செயலகம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது இலங்கை வங்கி
2ஆம் கிளையின் முகாமையாளர்

### இராஜசிங்கம் சிவராமலிங்கம்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஏ.எம்.ரி.ரான்ஸ்போட் சேர்விஸ்,**
**உரிமையாளரும் ஊழியர்களும்**
**இருபாலை, கோப்பாய்.**
(53964)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 06 - 11 - 1973



மறைவு 14 - 08 - 2006

### அமரர் பவானந்தன் சஞ்சித்குமார்

*(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

மண்மகிழ வந்துதித்த பண்பான திருவுருவே
மக்கள் சேவையிலே மனம் மகிழ்ந்த மன்னவரே
பாசத்துடன் இருந்து.எம்மையெல்லாம்
பரிதவிக்கவிட்டு மின்னலாய் மறைந்தீரே
எம் அன்புச் செல்வமே
உம் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கும்

*அரசடி ஒழுங்கை,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (53969)
**- குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மலையக மக்கள் முன்னணியிலிருந்து வெளியேற்றப்பட்ட விவகாரம்:

# மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் அருள்சாமி பதவி இழக்கும் நிலை! அவரது மனு தள்ளுபடி!

கொழும்பு, செப் 28

மலையக மக்கள் முன்னணியிலிருந்து தாம் வெளியேற்றப்பட்டமையை ஆட்சேபித்து மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் சந்தனம் அருள்சாமி தாக்கல் செய்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரிவு ஆயத்தினால் சட்ட நுணுக்கத்தின் அடிப்படையில் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.

இதன் காரணமாக மத்திய மாகாணக் கல்வி அமைச்சர் மற்றும் மாகாணசபை உறுப்பினர் பதவிகளை அவர் இழக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

இதேபோல, மலையக மக்கள் முன்னணியிலிருந்து தாம் வெளியேற்றப்பட்டமையை ஆட்சேபித்து மற்றொரு மத்திய மாகாண உறுப்பினரான டி. திகாம்பரம் தாக்கல் செய்த மனு மீதான தீர்ப்பு அடுத்த மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் கட்சியின் முடிவுக்கு மாறாக செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் அருள்சாமியையும், திகாம்பரத்தையும் கட்சியிலிருந்து மலையக மக்கள் முன்னணி வெளியேற்றியது.

இருவரும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதால் கட்சியின் சார்பில் மத்திய மாகாணத்தில் அவர்கள் பெறும் உறுப்பினர் பதவியையும் அவர்கள் இழந்தவர்களாவர் என்று மலையக மக்கள் முன்னணி, தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்தது.

அந்த அறிவிப்பை ஆட்சேபித்தும், தங்களைக் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கியமையை எதிர்த்தும் அவர்கள் இருவரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். அதில் அருள்சாமியின் வழக்கே ஆரம்பக் கட்டத்தில் - சட்ட நுணுக்கத்தின் அடிப்படையில் - நேற்று தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரிவு ஆயத்தில் நீதியரசர்கள் ஸ்ரீபவன், சிசர டி ஆப்ரூ, ரஞ்சித் யு.சில்வா ஆகியோர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

வழக்கில் எதிர்மனுதாரர்களாகக் கட்சியின் தலைவர் பெ. சந்திரசேகரன், செயலாளர் மற்றும் பலர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ஆனால், மேற்படி இருவரையும் கட்சியிலிருந்து நீக்கும் முடிவை கட்சியின் மத்திய குழுவே எடுத்து அதை அவர்களுக்கு அறிவித்திருந்தது என்றும் -

ஆனால், வழக்குகளில் கட்சியின் மத்திய குழுவும், அதன் உறுப்பினர்களும் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்படவில்லை என்றும் -

நடவடிக்கை எடுத்தவர்களை எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடாத நிலையில் யாருக்கு எதிராக விசாரணை நடத்தவது என்றும் -

எதிர்மனுதாரர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனையை ஏற்று வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவளித்தது நீதிமன்றம்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து மனுதாரர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யமுடியும்.

அத்தகைய மேன்முறையீட்டைச் செய்து, அதன் அடிப்படையில் அந்த நீதிமன்றத்திடமிருந்து இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பெற்றாலன்றி மனுதாரர் அருள்சாமி தமது மாகாண உறுப்பினர் பதவியையும், அதன் மூலம் மாகாணக் கல்வி அமைச்சர் பதவியையும் இழப்பது தவிர்க்க முடியாதது என்று சட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோன்ற நிலைமையே மற்றையவரான திகாம்பரத்தின் வழக்கிலும் ஏற்படும் என அந்த வட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன. (உ)

## வட.இ.ச.சபைப் பரீட்சைகள் - 2007

வட.இ.ச.சபையின் 2007ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் 20.09.2006 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 12.12.2006 விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா முப்பது (30/-) மட்டும்.

விண்ணப்ப படிவத்தை தபால்மூலம் பெறவிரும்புவோர் ரூபா 30/- பெறுமதியான காசுக்கட்டளையை (மணிஓடர்) உடன் ரூபா 5/= பெறுமதியான தபால் தலை ஒட்டிய சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் (10செ.மீ, 22செ.மீ) கடித உறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

*யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்*

வடஇலங்கை சங்கீத சபை,
யாழ்.கல்வி அலுவலகம்,
நல்லூர், யாழ்ப்பாணம்

*எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.* (சி/51063)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் சபாநாயகம்

வட்டுக்கோட்டையைபிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடம கவும் கொண்ட நாகலிங்கம் சபாநாயகம் நேற்று (27.09.2006) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதியரின் செல்வப் புதல்வனும், செல்வராணியின் அன்புக்கணவரும் காயத்திரி தேவி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி 2008 விஞ்ஞானப் பிரிவு) கம்சிகா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), துசான் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**5, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.** (53981) **தகவல்: மனைவி, பிள்ளைகள்.**

### தம்பு சுப்பிரமணியம்

(P.W.D ஓவசியர்)

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த தம்பு சுப்பிரமணியம் நேற்று (27.09.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், அம்பலவாணர்(மலேசியா), காலஞ்சென்ற இரத்தினம்(ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திரகுமாரி (ஓமான்), குலேந்திரன் (கட்டார்), காலஞ்சென்ற தெய்வேந்திரன் (கண்ணன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் த.முத்துக்கிருஷ்ணன்(ஓமான்), மைதிலி(கட்டார்) ஆகியோரின் மாமனும், இ.குமாரகுலசூரியர், இ.சூரியகுமார், இ.சந்திரகுமார் ஆகியோரின் சிறிய தந்தையும் திருமகள், லக்ஷ்மி, கைராசி, தட்ஷாயினி, இராகவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2006) காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுழிபுரம் வடக்கு ஊமைக்கேணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

*தகவல்,* **இ.சூரியகுமார்** *(பெறாமகன்)*

### மயிலன் மகாலிங்கம்

*(உடுப்பிட்டி ப.நோ.கூ.ச.ஊழியர்)*

நாவலடி உடுப்பிட்டியைச் சேர்ந்த மயிலன் மகாலிங்கம் நேற்று (27.09.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நவமணியின் அன்புக் கணவரும், அமரர் அசுவம்மா - நாகேந்திரம் தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான கார்த்திகேசு - கதிராசி தம்பதியரின் மருமகனும், சியாமளா, பிரமிளா, பிரபாகரன், கிருபாகரன், சர்மிளா, கோமளா ஆகியோரின் தந்தையும் புஸ்பராசா, ஜோதிவதனன், யசோதா ஆகியேரின் மாமனும், சுந்தரலிங்கம் (கனடா), ராஜன் (கனடா), மனோகரன்(லண்டன்), திருமதி இராசதுரை செல்வம் ஆகியோரின் சகோதரரும், சுந்தரலிங்கம் பாக்கியவதி(கனடா), ராஜன் மஞ்சுளா(கனடா) மனோகரன் சூரியகலா(லண்டன்), சாந்தநாதன் புனிதவதி ஆகியோரின் மைத்துனரும் சீ.சாந்தநாதனின்(ஆசிரியர்) சகோதரரும் கணபதிஐயாத்துரை-மலர் தம்பதியரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி, உடுப்பிட்டி.

*தகவல்,* கி.இராசதுரை (அதிபர்) (வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை)

## மேலக மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் வெளிநடப்பு

கொழும்பு, செப். 28

கொழும்பு, மாநகரசபையில் அங்கம் வகிக்கும் கட்சியின் உறுப்பினர்கள் நேற்று மாநகரசபை அலுவலகத்தில் கூட்டாக நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலிருந்து மேலக மக்கள் முன்னணியின் நான்கு மாநகர உறுப்பினர்களும் ஒன்றாக வெளிநடப்புச் செய்தனர்.

பத்திரிகையாளர் மாநாட்டில் கட்சிகளின் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கும் விடயத்தில் தமது கட்சிக்குரிய கௌரவமும், இடமும், சந்தர்ப்பமும் வழங்கப்படாமையை ஆட்சேபித்தே கட்சி உறுப்பினர்கள் பத்திரிகையாளர் மாநாட்டிலிருந்து வெளிநடப்புச் செய்தனர் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் வீதியைத் திருத்தித்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.28

சிறுப்பிட்டி மேற்கு - ஞானவைரவர் வீதி கடந்த 32 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படவில்லை.

அதனால் வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு குன்றும் குழியுமாக மாறியுள்ளது.

வலி.கிழக்கு புத்தூர் பிரதேச சபையின் கீழ் உள்ள மேற்படி சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் வீதியைத் திருத்தம் செய்யக் கோரி பல கடிதங்கள், மகஜர்கள் கையளிக்கப்பட்ட போதும் இதுவரை கவனிக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அரச அலுவலர்கள், வியாபாரிகள், பாடசாலை மாணவர்கள், ஞானவையிரவர் ஆலய அடியார்கள் என தினமும் 200 முதல் 400 வரையான மக்களின் போக்குவரத்துக்கு பயன்படும் வீதியாக இருந்தபோதும் - அது கவனிப்பாரற்று உள்ளது என்று சிறுப்பிட்டி மக்கள் உள்ளூராட்சி சபை செயலாளரின் (வலி.கிழக்கு) [illegible] துள்ளனர். (ப-95)

## போருக்கு எதிரான முன்னணியினர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, செப். 28

போருக்கு எதிரான முன்னணியினர் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியை அலரிமாளிகையில் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது, கொழும்பு வாழ் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும், ஆள்கடத்தல்கள் மற்றும் காணாமற்போகும் சம்பவங்கள் தொடர்பாகவும், வடக்கு - கிழக்கில் இடம்பெறும் வன்முறைகள், பொத்துவில் மற்றும் மூதூர்ப் படுகொலை சம்பவங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கொழும்பில் தமக்குக் கிடைத்த 26 சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்த ஆவணங்களை மேலக மக்கள் முன்னணியின் தலைவர் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இச்சந்திப்பின்போது தகவல்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி, ஆட்கடத்தல்களை முடிவுக்குக்கொண்டுவரத் தாம் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைக்கவுள்ளதாக குறிப்பிட்டார். அதில் சர்வதேச மன்னிப்புச் சபைகளின் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொள்ளப் போவதாக உறுதி அளித்தார்.

காணாமற்போனோர் பாதுகாப்புத் துறையினரால் கைதுசெய்யப்பட்டிருந்தால் அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப் பினர்களான ராஜித சேனாரட்ண, கே.ஏ.பி. பாயிஸ், நடராஜா ரவிராஜ் மற்றும் சமாதான ஆர்வலர் குமார் ரூபசிங்க ஆகியோர் பங்கேற்றனர். (ஐ-12)

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

மீண்டும் பாணின் விலை மாற்றம்

*28.09.2006 ம் திகதி வியாழக்கிழமையில் இருந்து 450 கிராம் நிறையுடைய ஒரு இறாத்தல் பாணின் ஆகக் கூடிய சில்லறை விலை ரூபா 28/= ஆகும்.*

-நிர்வாகம்-

## 45ஆம் நாள் நினைவில்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 26 | 15 |
| 09 | 08 |
| 1947 | 2006 |

### அமரர் கந்தையா குலசிங்கம்

*பாலை உந்தன் மனதோ*
*பாலை விட பசுமையானது*
*பாய்ந்தோடும் அருவிபோல*
*பாய்கின்றது என் மனம்!*
*பால் மணக்கும் உள்மனதில்*
*பாலகன் நான் கேட்கின்றேன்*
*பாசம் எனும் ஓர் இடம்*
*தருவாயா இந்த*
*பாமரனுக்கு சொல் பாலையே?*
*பாய்மரக் கப்பலில்*
*பாய் விரித்து*
*பாலைவன ஒட்டகம் போல்*
*பார்த்துக்கொண்டிருப்போம்*
*பாவை உன் வரவுக்காக!*

மனைவி, உற்றார், உறவினர், நண்பர்கள்

*32, செல்லர் வீதி, கல்வியங்காடு.* (53963) **ஞா.தனீஸ்வரன்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 14 | 29 |
| 06 | 08 |
| 1926 | 2006 |

### ஆறுமுகம் கந்தசாமி

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

அவரின் சபிண்டீகரணகிரியைகள் அன்னாரது வண்ணார்பண்ணை இல்லத்தில் இன்று **(28.09.2006)** வியாழக்கிழமை 10 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற இருக்கிறன.

இந்த நிகழ்வில் பங்குபற்றி அவரது ஆத்மசாந்தியின் பொருட்டு பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உறவினர்களையும், நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

*திரு.திருமதி.திருக்குமாரி கணேசலிங்கம் (ஆசிரியை) 15/2, சிவப்பிரகாசம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (53965)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் பட்டினியால் இறப்பதைத் தடுக்க ஏ-9 பாதையை அரசு உடன் திறக்கவேண்டும்!

## சபையில் மாவை எம்.பி. கோரிக்கை



கொழும்பு, செப்.28

"வடக்கில் உள்ள தமிழ் மக்களை பட்டினியால் கொலை செய்வதற்கு எடுத்திருக்கும் முடிவை அரசு உடனடியாக மாற்ற வேண்டும். படையினரால் மூடப்பட்டிருக்கும் ஏ-9 பாதையையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து அரச கட்டுப்பாட்டுடன் இணையும் அத்தனை பாதைகளையும் அரசு உடனடியாகத் திறக்க வேண்டும்.

விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையை நீக்கி வடக்குத் தமிழர்களின் பசிக்கொடுமையை அகற்றி, பசியால் அவர்களைக் கொலை செய்வதைத் தடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று நாடாளுமன்றில் உரையாற்றும்போது கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது,

"அரசு மேற்கொண்டு வரும் சதித்திட்டம் காரணமாக மக்கள் அகதிகளாகியுள்ளனர். அவர்களின் பொருள்களும் சூறையாடப்பட்டுள்ளன.

உடனடியாக ஏ-9 பாதையும் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுடன் இணைக்கப்படுகின்ற அனைத்துப் பாதைகளும் திறக்கப்பட வேண்டும்.

வடக்கில் அரசால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொருள் தட்டுப்பாடு உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இம் மாணவர்களின் கல்வி நடவடிக்கை கேள்விக் குறியாகியுள்ளது.

தமிழ் மக்கள் மீது அரசால் வேண்டுமென்று பலவந்தமாகத் திணிக்கப்பட்டிருக்கும் இந்தச் சதித்திட்டத்தை அரசு உடனடியாக நீக்க வேண்டும். எமது மக்கள் நிம்மதியாக வாழ அரசு வழி அமைத்துத் தர வேண்டும்.

வடக்கில் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உணவுப் பொருள்களின் விலை 5 மடங்காக உயர்ந்துள்ளது.

வங்கிகளில் பணம் இல்லை. பணம் இருந்தாலும் வாங்கப் பொருள்கள் இல்லை. யாழ். வர்த்தக சமூகம் ஏ-9 பாதை மூடப்பட்டிருப்பதால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்ய முயன்றபோதும் படையினர் அதற்குத் தடை விதிக்கின்றனர்.

இன்னும் சில நாட்களுக்கு இந்த நிலை நீடித்தால் மக்கள் பசியால் இறக்க நேரிடும். எனவே, அரசு உடனடியாக இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்" - என்றார். (க)

# ஜே.வி.பியுடன் சேர்ந்து ஆட்சியை கைப்பற்றுவதற்கு ஐ.தே.க. திட்டம்

## அக்கட்சியுடன் பேச்சு நடத்த நால்வர் குழுவை நியமித்தார் ரணில்

கொழும்பு, செப்டெம்பர் 28

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான உறவு மிகமோசமான நிலைக்குச் சென்றிருப்பதை அடுத்து, ஆளுந்தரப்பு மீது சீற்றமடைந்திருக்கும் ஜே.வி.பியினரைத் தம்பக்கம் வளைத்துக்கொண்டு அரசை ஆட்டங்காணச் செய்யும் முயற்சிகளில் முழுமூச்சாக இறங்கியிருக்கிறது எதிக்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.

ஜே.வி.பி. தலைவர்களோடு நேரடியாகப் பேச்சு நடத்துவதற்கும், ஜே.வி.பி. மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியனவற்றின் நாடாளுமன்றப் பலத்தைச் சேர்த்துக்கொண்டு மாற்று அரசு ஒன்றை நிறுவும் வாய்ப்புகள் பற்றி ஆராய்வதற்கும் கட்சிப் பிரமுகர்கள் நால்வர் அடங்கிய சிறப்புக் குழு ஒன்றை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்திருக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ஜெயவிக்கிரம பெரேராவைத் தலைவராகக் கொண்ட இக்குழுவில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்த்தன, தி.மகேஸ்வரன் மற்றும் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் அடுத்த சில தினங்களில் ஜே.வி.பி. கட்சியின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர் எனத் தெரிகின்றது.

இதேவேளை -

மாற்று அரசு ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி ஜே.வி.பியுடன் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவேபேச்சுக்களைத் தொடங்கிவிட்டது என்ற பரபரப்பான தகவல் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நேற்று அடிபடத் தொடங்கியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான விரிசல்கள், ஜே.வி.பி. தலைவர்கள் அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குறித்து வெளியிட்ட மோசமான விமர்சனங்களால் மேலும் அகன்று இருதரப்புகளுக்கும் இடையே பகைமை முற்றி வெடித்துப் போயுள்ளது. இந்த நிலைமையை தனக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டு அரசுக்கு நெருக்கடி கொடுத்து அதனை ஆட்டங்காணச் செய்யவும், சந்தர்ப்பம் வாய்த்தால் ஜே.வி.பி., முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.காங்கிரஸ் என்பவற்றின் ஆதரவோடு ஆட்சி அமைப்பதற்கான முன்முயற்சிகளில் இறங்கிப் பார்க்கவும் ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிடுகிறது என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

அந்த முற்சியின் முதல் நகர்வாகவே ரணில் விக்கிரமசிங்க நால்வர் குழுவை நியமித்து ஜே.வி.பியினருடன் பேச்சுக்களைத் தொடக்கியுள்ளார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ)

## தி.மு.கவில் திருமாவளவன்

அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகுவதாக திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு அறிவித்துள்ளது. அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்து போட்டியிடப்போவதாகவும் அக்கட்சி அறிவித்தது. அ.தி.மு.கவுக்கும் விடுதலைச் சிறுத்தைகள் அணிக்குமிடையே உள்ளுராட்சி தேர்தல் இட ஒதுக்கீடு தொடர்பாக எழுந்த இழுபறியை அடுத்தே பரபரப்பான இந்த அரசியல் திருப்பம் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. நேற்றிரவு திருமாவளவனும் கலைஞர் கருணாநிதியும் சந்தித்துக் கலந்துரையாடினர். (ஐ)

## ஏ-9 பாதையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்புக் குழுத்தலைவருக்கும், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் கிளிநொச்சியில் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது தமிழ்ச்செல்வன் தெரிவித்த அம்சங்களின் சாரம் வருமாறு:-

ஏ-9 பாதை தடைப்பட்டதால் யாழ். குடாநாட்டில் சிக்குண்டுள்ள சுமார் ஐந்து லட்சம் மக்கள் பேரவலத்தை எதிர்கொண்டுள்ளனர். அங்குள்ள மக்களின் ஒவ்வொரு வாழ்வியல் விடயங்களும் இந்தப் பாதைத் தடையால் பாதிக்கப்பட்டுள்ளன.

அங்கு எரிபொருள் தீர்ந்து விட்டது. அதனால், மின்விநியோகம் செயலிழப்பு, போக்குவரத்துச் சேவைகளும் நிறுத்தப்பட்டுவிட்டன. மக்களின் இந்த முக்கிய இரு அடிப்படைச் சேவைகளும் அடியோடு ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பும் முடிந்தது விட்டது. அதனால், இருக்கும் அற்ப சொற்ப பொருள்களின் விலையும் பல மடங்கு எகிறி விட்டது. இந்தப் பாதைத் தடையால் தங்களின் வாழ்வாதாரங்களை இழந்துள்ள மக்கள் அதனால் பட்டினி நிலைமையை எதிர்கொள்கின்றனர்.

எரிபொருள், மின்விநியோகம் போன்றவை இன்மையால் வைத்தியசாலைகள் இயங்க முடியாத நிலைமை.

யாழ்ப்பாணத்தில் நிலவும் அச்சசூழ்நிலையால் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்தத்தின் மைய முள்நாணே - முதுகெலும்பே - ஏ-9 வீதியைத் திறந்து மக்கள் போக்குவரத்துக்கு விடுவதுதான். அந்த ஒப்பந்தத்தில் மையக் குறியீட்டு நல்லெண்ண வெளிப்பாடாக அமைவது அதுவே.

அத்தகைய விடயம் நடைமுறைப்படுத்தப்படாமல், அதன் காரணமாக மனிதத் துன்பியல் பேரவலம் உருவாகித் தொடர்கின்றது.

இலங்கை இராணுவம் தன்னுடைய ஏற்பாட்டில் சம்பூர், மூதூர், முகமாலை என்று ஊடகவியலாளர்களைத் தானே கூட்டிச் சென்று - சுற்றுலா நடத்திக் காட்டுகின்றது. ஆனால் அதேசமயம், அந்த இடங்களுக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களைச் செல்ல விடாமல் அதே இராணுவம் தடுக்கின்றது.

இதனை நோக்கும்போது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும், அதன் கீழ் யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் செயற்பாட்டையும் இலங்கை அரசு எப்படிக் கருதுகின்றது என்ற கேள்வி எழுகின்றது.

- இப்படி தமிழ்ச்செல்வன், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரிடம் தெரிவித்தார் என அறிய வந்தது.

இச்சந்திப்பு நேற்றுமுற்பகல் 10 மணி முதல் 11 மணிவரை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் தரப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றனர். (உ)

## பெற்றோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோலின் விலை 2 ரூபாவாலும் டீசலின் விலை 2 ரூபா 50 சதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை குறைக்கப்பட்டிருப்பதால் இங்கும் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்குடாநாட்டிற்கு எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தின் முதல்வாரம் அளவில் இருந்து எரிபொருள்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக எரிபொருள் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (க)

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் கலந்து கொண்டனர்.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் சிவில் நிர்வாகத்துடன் தொடர்புடைய அதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டத்தின் அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்களின் கையிருப்பு மற்றும் தேவைகள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது.

எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாநாட்டில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. (1-68)

## முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளுக்கும், கண்காணிப்புக் குழுத் தலைவருக்குமிடையில் நேற்றுச் சந்திப்பு நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் இந்த விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-12)

## தலைவர் பிரபாகரனிடமிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்படவேண்டும் என்று அரசுத்தரப்பு நோர்வேயிடம் கேட்டிருந்தது.

தற்போது இதுதொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து சாதகமான பதில் கிடைத்திருப்பதாக ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது பற்றி அவர் கூறியதாவது:-

எங்களால் முன்வைக்கப்பட்ட விடயங்களுக்குப் பதில் அளிக்கும் முகமாக கடந்த வாரம் கிளிநொச்சிக்குச் சென்ற நோர்வே அனுசரணையாளர்கள், சில சாதகமான பரிந்துரைகளுடன் திரும்பியிருக்கின்றார்கள். இது தொடர்பாக எமக்கு இன்னமும் சில விளக்கங்கள் தேவைப்படுகின்றன. அடுத்த சில தினங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதுதொடர்பாக ஆராய்ந்து முடிவெடுப்பார்.

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் இனியும் அரசு விளையாட விரும்பவில்லை. இதனால்தான் விடுதலைப் புலிகளின் தலைவரிடமிருந்து சாதகமான - உறுதியான - அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது.

சமாதானம் என்ற பெயரில் புலிகள் இந்த நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கு அரசு இனியும் இடந் தராது.

*கேள்வி:* பேச்சுக்கான உறுதி மொழி பிரபாகரனிடமிருந்து எந்த வடிவத்தில் கிடைத்துள்ளது?

*ரம்புக்வெல:* அவர் இதனை ஒரு வித்தியாசமான வடிவத்தில் கொடுத்து அனுப்பியிருக்கிறார். அதன் விவரங்கள் பற்றி ஜனாதிபதியுடன் கலந்துபேசிய பிறகே உங்களுக்குத் தெரிவிப்பேன். - என்றார் ரம்புக்வெல.

## நாடாளுமன்றின் மத்தியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றம் கூடியதும் புதிய உறுப்பினர் சத்தியப்பிரமாணம், கேள்வி நேரம் மற்றும் வண.அத்துரலிய தேரர், ஹக்கீம் ஆகியோரின் விசேட அறிக்கை ஆகியவற்றைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராஜா தமிழர் தாயகத்தில் நிலவும் நெருக்கடி நிலை குறித்து விசேட அறிக்கை ஒன்றை விடுத்து உரையாற்றினார்.

அதையடுத்து -

சபைக்கு வந்திருந்த 17 தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களும் சபைக்கு நடுவே அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். இரு பெண் எம்.பிக்கள் உட்பட அனைத்து கூட்டமைப்பு எம்.பிக்களும் கறுப்புச் சால்வைகளை அணிந்திருந்தனர். புதிய எம்.பியாக நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட சந்திரநேரு சந்திரகாந்தன் எம்.பிக்கு தமது ஆசனத்தில் சிறிது நேரம் மட்டுமே அமரக் கிடைத்தது. அதன் பின் சபை நிகழ்வுகள் முடியும் வரை சபையின் நடுவே சப்பணமிட்ட நிலையில் தரையில் ஏனைய சக உறுப்பினர்களோடு அவர் அமரவேண்டியதாயிற்று.

தரையில் அமர்ந்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் ஜே.வி.பியின் எம்.பிக்கள் வந்து மிக அன்னியோன்னியமாக உரையாடிக் கொண்டிருந்ததையும் காணக் கூடியதாகவிருந்தது. சபை ஒத்திவைக்கப்பட்டிருந்த நேரத்தில் பிரதி அமைச்சர்களான மஹிந்த அளுத்கமகே, மேர்வின் சில்வா ஆகியோரும் சபைக்கு நடுவே வந்து கூட்டமைப்பு எம்.பிக்களுடன் உரையாடிக் கொண்டிருந்தனர். இவர்களுடன் ஜே.வி.பி. எம்.பிக்களான விமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோரும் கூட்டமைப்பு எம்பிக்களுடன் சரளமாக உரையாடியமையையும் காணக் கூடியதாகவிருந்தது. (உ)

## ஏ-9 வீதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். எனவே, ஏ-9 பாதையை இப்போதைக்குத் திறப்பது சாத்தியமில்லை. விடுதலைப் புலிகளுக்கு வருமானத்தை வசூலிக்கமுடியாத மற்றுமொரு பாதையைத் திறப்பது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்துவருகிறது.

இதுபற்றிய மேலதிக விவரங்களை இப்போது வெளியிடமுடியாது.

இவ்வாறு இராணுவப் பேச்சாளர் அங்கு மேலும் தெரிவித்தார். (ஐ)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

C.B Computer Academy
T.P No 021-4590291 Station Road, Kondavil

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org